இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 11-08-2023

# யார் தடுத்தது? - 2

**வே**ளாண் சட்டங்கள் மூலமாக இந்திய விவசாயிகளை மொத்தமாக முடக்கி வைக்க நினைத்தது பா.ஜ.க. ஆட்சி.

*** விவசாயிகளின் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்கப்படுத்தல் மற்றும் வசதி செய்தல்) மசோதாவின் மூலம் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் என்ற நடைமுறையே முற்றிலுமாக வழக்கொழிந்து போகும். இந்த மசோதா, விவசாயிகள், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தவிர்த்து விட்டு யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்து கொள்ளலாம் என்று சொல்கிறது. இதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் குறைந்தபட்ச ஆதார விலையும் இன்ன பிற வசதிகளும் முற்றிலும் ஒழித்துக்கட்டப்படும்.**

*** விவசாயிகள் (முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பு) விலை உறுதியின் மீதான ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவை மசோதாவின்படி, விவசாயம் சார்ந்த தொழில் நிறுவனங்கள் அல்லது மெகா சில்லறை வியாபாரிகள் எனப்படும் கார்ப்பரேட் நிறுவனங்கள் என்ன சொல்கிறதோ அதுதான் விலையாக மாற்றப்படும்.**

*** அத்தியாவசியப் பொருட்கள் (திருத்த) மசோதாவின் படி, பொருட்களைப் பதுக்கி வைத்து தேவையைப் பெருக்கி, அதன் மூலம் விலையைக் கூட்டி அதிக லாபம் பார்க்கலாம். அவசியப் பொருட்களை, அவசியப் பொருட்கள் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டது. ஸ்டாக் வைக்கும் வரையறையையும் தளர்த்தி விட்டது.**

- இந்த மூன்று சட்டங்களுக்கும் எதிராக இந்திய விவசாயிகள் வீறு கொண்டு எழுந்தார்கள். தலைநகர் டெல்லியையே முடக்கினார்கள். அவர்கள் நடத்திய படையெடுப்பு - இந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெறுகிறோம் என்று சொல்லும் வரைக்கும் தொடர்ந்தது. 'இரும்பு மனிதர்' மோடியை அடிபணிய வைத்தார்கள் இந்திய விவசாயிகள். இத்தகைய போராட்டம் நடத்தாமல் இருந்திருந்தால் மூன்று வேளாண் சட்டங்கள் நடைமுறைக்கு வந்திருக்கும். இருந்த வாய்ப்புகளையும் மொத்தமாக இழந்திருப்பார்கள் விவசாயிகள். விவசாயிகள் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவேன் என்ற வாக்குறுதி நிறைவேறியதா என்றால் இது வரை இல்லை. **இப்படிச் செய்யவிடாமல் தடுத்தது யார்? எதிர்க்கட்சிகளா?**

**2 கோடி பேருக்கு வேலை:**

**"ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம்" என்றார் பிரதமர் மோடி. தரப்பட்டதா? இல்லை.**

இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் (CMIE) படி, ஆகஸ்ட் 2022 இல் வேலையின்மை விகிதம் 12 மாதங்களில் இல்லாத அளவுக்கு 8.3 சதவீதத்தைத் தொட்டுள்ளது. இளைஞர்களின் வேலையின்மை விகிதம் 42 சதவீதமாக இப்போது உள்ளது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் சாதனையாகும்.

நவம்பர் 8, 2016 அன்று, பிரதமர் மோடி பணமதிப்பிழப்பு நடவடிக்கையை அறிவித்தார். இதன் விளைவாக 50 லட்சம் பேர் வேலையை இழந்தார்கள். காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பை PLFSஇன்படி 2017-18 வேலைவாய்ப்பின்மை 45 ஆண்டுகாலம் இல்லாத அளவுக்கு உச்சத்தை தொட்டது. மிக மோசமான ஜி.எஸ்.டி. வரியும் தொழில் வளர்ச்சியை முடக்கி வேலை வாய்ப்பைக் குறைத்தது. அடுத்து வந்தது கொரோனா. நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடாமல், தடுப்பூசியும் போடாமல் பா.ஜ.க. அரசு இருந்தது. அவர்களுக்குத் தெரிந்த ஒரே தீர்வாக ஊரடங்கு மட்டுமே இருந்தது. இதுவும் பலரது வேலையைக் காலி செய்தது. 2 கோடிப் பேர் வேலையை இழந்தார்கள். வேலை இழப்புகள் அதிகமாக தொடரும் காலமாக மோடி ஆட்சிக் காலம் இருந்தது.

ஒன்றிய பணியாளர் துறை அமைச்சர், கடந்த எட்டு ஆண்டுகளில் 22 கோடி அரசு வேலை விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், 7.2 லட்சம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 2014 முதல் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தந்திருந்தால் ஒன்பது ஆண்டு காலத்தில் 18 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். கிடைத்ததா? என்றால் இல்லை.

**நாட்டில் அதிகமாக பதிவு செய்து, வேலை கிடைக்காமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2022 ஆம் ஆண்டு உயர்ந்தது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் சாதனையாகும். இதுதான் பா.ஜ.க. ஆட்சியில் வேலை பெறுவோர் நிலைமை ஆகும். அதனால்தான் பிரதமர் மோடி அவர்களின் பிறந்தநாளை 'வேலைவாய்ப்பின்மை தினமாக' கொண்டாடி வருகிறது இளைஞர் காங்கிரஸ். இது பொருத்தமான பெயராகவே அமைந்துள்ளது.**

கடந்த ஆண்டு நவம்பரை விட டிசம்பரில் வேலை வாய்ப்பின்மை அதிகம் ஆனது. நவம்பரில் வேலை வாய்ப்பின்மை விகிதம் 8 விழுக்காடு என்றால் டிசம்பரில் 8.3 விழுக்காடு ஆனது. **இது யார் குற்றம்? எதிர்க்கட்சிகளின் குற்றமா?**

ஒன்பது ஆண்டுகள் அமைதியாக இருந்துவிட்டு, 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உடனடியாகத் தர வேண்டும் என்று கடந்த ஆண்டு அறிவித்தார் பிரதமர். 18 மாதங்களில் 10 லட்சம் பேருக்கு வேலை என அறிவிக்கப்பட்டது. அதிலும் 70 ஆயிரம் பேருக்குத்தான் வேலை தரப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் 8.72 லட்சம் காலிப்பணியிடங்கள் இருப்பதாக பணியாளர் துறை இணை அமைச்சர் ஜிதேந்தர சிங் கடந்த ஆண்டு சொன்னார். அதனை நிரப்பும் எந்த முயற்சியும் பா.ஜ.க. அரசிடம் இதுவரை இல்லை.

இப்படி தான் சொன்ன -

*** கருப்புப்பணத்தை மீட்பேன், 15 லட்சம் வரை இந்தியர்கள் பெறலாம்.**

*** விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையை இரண்டு மடங்கு ஆக்குவேன்.**

*** ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பேன் - ஆகிய மூன்று முக்கியமான இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டதா? இல்லை என்றால், அதனை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது எதிர்க்கட்சிகளா?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.8.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில், "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023'ல் இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான ஹாக்கி போட்டியை தொடங்கி வைத்து, இரு அணிகளின் தலைவர்கள், வீரர்கள் மற்றும் நடுவர்களை வாழ்த்தினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் குமார் திர்கி ஆகியோர் உள்ளனர்.

### நாட்டின் சிறந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயிலச் செல்லும்

# தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு - மடிக்கணினி - சான்றிதழ்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்து!

சென்னை, ஆக.11 -

நாட்டின் மிகச் சிறந்த கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.8.2023) பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் மிகச் சிறந்த கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணையதள வசதிகள், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடி கல்வி", "நம் பள்ளி நம் பெருமை", "எண்ணும் எழுத்தும்", "நம்ம ஸ்கூல் பவுண்டேசன்", "அனைவருக்கும் ஐஐடி" போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் நாட்டின் மிகச் சிறந்த கல்வி நிலையங்களில் உயர்கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் போன்ற புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்நிறுவனங்களில் இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும் என்றும் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணவர்கள் இந்த உதவியைப் பெறலாம்" என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், நாட்டின் முதன்மை உயர்கல்வி நிலையங்களான இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT), தேசிய தொழில்நுட்ப கழகம் (NIT), தேசிய பேஷன் தொழில்நுட்ப கழகம் (NIFT), இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் (IMU), தேசிய சட்டப் பல்கலைக்கழகம் (NLU), தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிலையங்களில் கல்வி பயின்றிட JEE, CUET, National Aptitude Test in Architecture போன்ற நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ள அரசு பள்ளிகளைச் சார்ந்த சுமார் 225 மாணவ, மாணவியர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் அவர்களின் கல்விச் செலவினத் தொகை முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. இதன்மூலம் அம்மாணவ, மாணவியர் உயர்கல்வியை எவ்வித தடையுமின்றி பயில இயலும்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக கடந்த கல்வியாண்டில் தமிழ்நாட்டின் 25 மாவட்டங்களில் 25 மாதிரிப் பள்ளிகள் (Model Schools) தொடங்கப்பட்டது. இம்மாதிரிப் பள்ளிகள் அனைத்தும் உண்டு உறைவிடப் பள்ளிகளாக செயல்பட்டு வருகிறது. இம்மாதிரிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில், முதன்மைக் கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயில விருப்பமுள்ள மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தக் கல்வியாண்டில், மேலும் 13 மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, தற்போது 38 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மாதிரிப் பள்ளிகளில் அளிக்கப்பட்ட சிறப்புப் பயிற்சிகளின் காரணமாக இன்றைக்கு சுமார் 225 அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மை கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயில வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்மூலம், தனியார் பள்ளி மாணவர்களால் மட்டும்தான் நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களில் சேர்ந்து கல்வி பயில முடியும் என்ற எண்ணத்தை உடைத்து, அரசுப் பள்ளி மாணவர்களாலும் அத்தகைய முன்னோடி கல்வி நிலையங்களில் சேர்ந்து பயில முடியும் என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில், தைவான் நாட்டு பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயில தேர்வாகியுள்ள கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவி ஜெயஸ்ரீ பேசிய போது, தமிழ்நாடு அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் சிறப்பு பயிற்சி பெற்று தைவான் நாட்டின் குன் ஷான் (Kun Shan) பல்கலைக்கழகத்தில் இளங்கலை இயந்திர பொறியியல் படிக்க தேர்வாகியுள்ளதாகவும், கிருஷ்ணகிரி மாவட்டம், பண்ணந்தூர் என்ற குக்கிராமத்தில் பிறந்து கடல் கடந்து வேறொரு நாட்டிற்கு கல்வி பயில வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றும், "நான் முதல்வன்", "இல்லம் தேடி கல்வி", "புதுமைப் பெண்", "வானவில் மன்றம்" போன்ற சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி தன்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மாணவர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, மாணவச் சமுதாயத்தின் சார்பில் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

இந்த விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இல்லம் தேடிக் கல்வி சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சி அரியமங்கலம் - துவாக்குடி வரை

# அணுகுசாலை கண்டிப்பாக அமைக்கப்படும்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி உறுதி!

*திருச்சி, ஆக. 11-*

*திருச்சி அரியமங்கலம் முதல் துவாக்குடி வரையிலான அணுகுசாலை கண்டிப்பாக அமைக்கப்படும் என அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உறுதிபடத் தெரிவித்தனர்.*

*திருச்சி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில், அரியமங்கலம் பால் பண்ணை மற்றும் துவாக்குடி இடையே அணுகு சாலை அமைப்பது தொடர்பாக அமைச்சர்கள், ஆட்சியர், அணுகு சாலை மீட்பு கூட்டமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.*

*கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு பேசியது:*

*அணுகுசாலை அமைப்பது குறித்து முதல்வரிடம் தெரிவித்து, அதை உறுதியாக நிறைவேற்றுவோம். மக்களவைத் தேர்தல் வருவதால், சற்று தாமதம் ஆகலாம். ஆனால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பணி ஒன்றிய அரசு மூலமாக நடைபெற்றால், அணுகுசாலைக்காக கையகப்படுத்தும் இடத்துக்கும் பணம் கொடுத்து விடுவார்கள். சாலையையும் அமைத்து விடுவார்கள். அதற்கான முயற்சியையும் தொடங்குகிறோம் என்றார்.*

*பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியது: நான் கடந்தமுறை சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தபோதே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி பேரவையில் பலமுறை பேசியுள்ளேன். இதுதொடர்பாக ஒன்றிய அமைச்சரையும் சென்று சந்தித்து வந்தேன். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணத்தான் இந்த கூட்டம். எனவே, விரைவில் தீர்வு காணப்படும் என்றார்.*

*ஆட்சியர் மா. பிரதீப் குமார் பேசியது : அணுகுசாலைக்கு தேவையான நிலம் எடுப்பது தொடர்பாக 2013 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு ரூ.89 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் தற்போது அவற்றுக்கான செலவுத் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளது. தனியார் நிலங்கள் மட்டும் ஏறத்தாழ 96,679 சதுர அடி தேவைப்படுகிறது. மொத்தமாக நிலம் கையகப்படுத்த, இழப்பீடாக வழங்க மட்டுமே ரூ.578 கோடி தேவைப்படுகிறது என்றார்.*

*2 மாதங்களில் நிலம் கையகப்படுத்த வலியுறுத்தல் : கூட்டத்தில், அணுகு சாலை மீட்பு கூட்ட மைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் எஸ். சுப்பிரமணியன், எஸ். சக்திவேல், ஏ. நடராஜன் ஆகியோர் பேசியது : நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலையில் அணுகு சாலை அமைக்க வேண்டும். அடுத்த இருமாதங்களுக்குள் அதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளை தொடங்க வேண்டும். இழப்பீட்டு தொகையை முடிவு செய்து, தொடர்புடைய பணிகளுக்கான முடக்கப்பட்ட கோப்புகளை அலுவலர்கள் விடுவிக்க வேண்டும் என்றனர். இதே கோரிக்கையை கூட்டத்தில் பங்கேற்ற பல்வேறு நலச் சங்கங்களின் நிர்வாகிகளும் வலியுறுத்தினர்.*

*நிகழ்வில், மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், ஆணையர் இரா.வைத்திநாதன், மாநகர காவல் ஆணையர் காமினி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சுஜித்குமார், தேசிய நெடுஞ்சாலை அதிகார திட்டக் குழும மண்டல அலுவலர் அஜய் பிஸ்னாய், மாநகர செயலாளர் மண்டல தலைவர் மு.மதிவாணன், பல்வேறு நலச்சங்க நிர்வாகிகள், அமைப்பு நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலரும் பங்கேற்றனர்.*



திருச்சி – தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில், அரியமங்கலம் பால்பண்ணை மற்றும் துவாக்குடி இடையே அணுகுசாலை அமைப்பது தொடர்பாக அமைச்சர்கள், ஆட்சியர், அணுகு சாலை மீட்பு கூட்டமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருச்சி அரியமங்கலம் முதல் துவாக்குடி வரையிலான அணுகுசாலை கண்டிப்பாக அமைக்கப்படும் என அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உறுதிபடத் தெரிவித்தனர்.